# கோடி இன்பம்*

(வேலன் பாட்டு)

பாரதி பேரவை



## பாரதி விருது மலர்

1969-70 முதல் 1973-74 வரை

**பாரதி நேசன்**

Ninety Seconds
from now, you
will know all
about TVS
Comprehensive
Service

- TVS will sell you a new truck
- Arrange 70% or more of the finance to buy it
- And build the body
- Maintain and service the vehicle
- Retread yuur tyres

TVS stock Spares in extensive network of office and out-lets

You Can Trust TVS

T. V. Sundram Iyengar
& Sons Limited,
MADURAI.

உண்மை உழைப்பு சமத்துவம்

# ஐயாண்டு விருதுநர் மலர்

இரண்டாம் பாகம்

ஜூன், 1977.

விற்பனை உரிமை :

கைலாஸ் சேல்ஸ் ஏஜன்சீஸ்,

1/19, விநாயக முதலி தெரு,

மந்தைவெளி, சென்னை-28

தொலைபேசி எண் : 76176

# ஓர் அரசியல் சிந்தனை

ஆசிரியப் பெருந்தகைகளே,

வணக்கம். உண்மையில் நாடாள வேண்டியவர்கள் ஆசிரியர்கள் அல்லவா. அதற்காகவும் ஜனநாயகத்தின் சாபக்கேடுகள் ஓரளவுக்கு நீங்கவும் இந்திய அரசியல் சட்டத்தில் சில மாற்றங்கள் காணவேண்டியது அவசியமாகிறது. இதற்கான போராட்டங்காண்பது உங்கள் கையில்தானிருக்கிறது. இனி மாற்றங்களைப் பார்ப்போமா.

1. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நாட்டின் மற்றும் மாநிலத்தலைமைப்பதவி வகிப்பவர்கள்-பிரதம மந்திரி, முதலமைச்சர் ஆகியோர் - ஒரு தேர்தல் காலத்திற்கு மேல், அதாவது ஐந்தாண்டுக்கு மேல் பதவி வகித்தல் ஆகாது.

2. மாநிலச் சட்ட மேலவைக்கு ஆசிரியர்களுக்குத் தனித் தொகுதி உள்ளது போல் அரசு ஊழியர்களுக்கும் இருத்தல் வேண்டும். அதுபோல் மாநிலச் சட்டசபைக்கும் மத்திய மக்களவைக்கும் இருசாராருக்குமே தனித்தொகுதிகள் இருத்தல் வேண்டும்.

3. ஒரு கட்சி சார்பில் தேர்தலில் நின்று வெற்றி பெற்ற ஒருவர் அவர் பதவிக்காலத்தில் அக்கட்சியை விட்டு விலகினால் அவரது தேர்தல் வெற்றி அக்கணமே தள்ளுபடியான ஒன்றாகும். அவர் தொகுதியில் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும்.

ஆசிரிய மணிகளே! நாட்டின் நிரந்தர நன்மைகாண இது பற்றி ஆழ்ந்து சிந்தித்துத் தக்கன செய்ய முனைவீர்களா? நாடு உங்கள் தொண்டை, உங்கள் போராட்டத்தை எதிர்பார்த்து நிற்கிறது.

செயல்பட்டு உயர்வீர்களாக!

வாழ்க ஆசிரியர் குலம்! வாழிய பாரதம்!!

பாரதிநேசன்

பேரவையின் முதல் ஐயாண்டு பாரதி விருதுநர்களின்
மலருக்கு மணங்கூட்ட அடுத்த ஈராண்டுக்கல்வி
விருதுநர்களையும் மகிழ்ச்சியுடன் அறிவித்துப்
பாராட்டி வாழ்த்தி வணங்குகிறோம்.

பாரதி பேரவை
இளசை
1—6—'77.

பாரதிநேசன்
நிர்வாக இயக்குநர்

# பாரதி கல்வி விருது

## 1974 – '75

**உயர்நிலைப்பள்ளி**

1. ராணி மெய்யம்மை பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 28.
2. ஸ்ரீ பரம கல்யாணி உயர்நிலைப்பள்ளி,
   ஆழ்வார்குறிச்சி, நெல்லை மாவட்டம்.
3. புனித சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி,
   மதுரை - 9
4. சென்னைக் கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி,
   சேத்துப்பட்டு, சென்னை - 31

**கல்லூரி**

1. பாத்திமா கல்லூரி, மதுரை–18.
2. சீதாலக்ஷ்மி ராமசாமி கல்லூரி, திருச்சி-2.

## 1975 – '76

**உயர்நிலைப்பள்ளி**

1. என். கே. டி. தேசியப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
   திருவல்லிக்கேணி, சென்னை-5.
2. ஸ்ரீ பல்தேவ்தாஸ் கிகானி வித்யாமந்திர் உயர்நிலைப்பள்ளி,
   கோவை-2.
3. புனித இதய உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீவில்லிபுத்தூர்.
   முகவை மாவட்டம்.

**கல்லூரி**

1. எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி, சென்னை-18.
2. அமெரிக்கன் கல்லூரி, மதுரை-2.

ஐந்தாண்டினில் யான்தாண்டிய
கவிப்படிகள்

# கோடி இன்பம்

(வேலன் பாட்டு)

''வேழனார் துணையாக வேடமா தணைந்தவனாய்த்
தேவமாப் படையாளத் தேவமா திணைந்தவனாய்ச்
சூலனார் மகனாகச் சூரனார்க் கருள்தகையே
ஓலமாக் கடலாட வேலனாய் அருள்குகனே''

பாரதிநேசன்

பைந்தமிழ்ப் பதம் இனிக்கப்
பழனியில் பரம் மணக்கும்
கந்தனின் கரம் வரிக்கத்
கழனியும் கயல் விரிக்கும்
தென் தணிப் புகழ் ஒலிக்கச்
செந்திலில் கடல் சிரிக்கும்
செந்தமிழ்ப் பறல் ஒலிக்கச்
சிந்தெழக் கழல் சிலிர்க்கும்

## சங்கநாதம் முழங்குது

சங்கநாதம் முழங்குது

அங்க நாளம் ஆர்ப்ப ரிக்க
அந்தி மேளம் ஆர்த்தி னிக்கத்
தங்க வேலன் தளிய திர்க்கச்
சங்க காலத் தமிழொ லிக்கச்
(சங்கநாதம் முழங்குது)

பங்க முற்றே பகையும் மாறப்
பந்த முற்றே படையும் ஆரச்
சிங்க வேலன் செருமு ழக்காய்ச்
செந்தில் ஆடுந் திரையொ லிக்கச்
(சங்கநாதம் முழங்குது)

பொங்கும் ஓங்கா ரந்தொ னிக்கப்
போற்றும் ஆங்கா ரந்த ணிக்க
அங்கை வேலும் அகம்வி ரிக்க
ஆற்றும் வேலன் புகழொ லிக்கச்
(சங்கநாதம் முழங்குது)

பழமார் பழனி

பழமுதிருஞ் சோலை

களமாறு செந்திலொடு

காண்பரங் குன்றம்

தலமாந் திருத்தணிகை

சாமிமலை யென்றே

தவமாம் படையாறுஞ்

சாற்று.

காமியாம் சிவ காமியால்—தமிழ்

காணிறையாய் ஆகினுன்—குரு

சாமியாம் சிவ சாமியாய்—ஒளிர்

சாமிமலை கூடினுன்—குளிர்

வானமாந் தமிழ் ஞானமாய்—இகம்

மகிழ்பழனி ஏறினுன்—எழிற்

காமனுந் தமிழ்க் காமனுய்ப்—புகழ்

கமழ்தணிகை மேவினுன்—கொடுங்

காலனுங் கழற் காலனுய்க்—கடற்

களச்செந்தில் ஆடினுன்—அருட்

பாலமாம் பரப் பாலமாய்த்—திருப்

பரங்குன்றம் தேரினுன்—வரை

ஓரமாங் கடை யோரமாய்ப்—பழம்

உதிர்சோலை ஆரினுன்—குணம்

ஆறுமாம் படை யாறுமாய்க்—களம்

அதிர்வேலைக் கூடினேம்

# கோடி இன்பம் பற்றிச் சில வார்த்தைகள்

கவிதை ஒரு இயல்பு. அவ்வியல்பு கைகூடிவர யான் எடுத்துக் கொண்ட காலம் மிகக்குறைவு. ஆனால் பிரயத்தனமோ பிரம்மப் பிரயத்தனம். ஒருமனப்பட்ட ஈடுபாடோ சாதாரண மனித சக்திக்கு அப்பாற்பட்டது. அதற்காகத் தாண்டிய படிகள் பல்லாயிரக் கணக்கானவை. அவைகளில் ஒரு தனிவழிப் படி-களின் தொகுப்பே உங்கள் கையிலுள்ள 'கோடிஇன்பம்' கவிப்-படிகளைப் போல உலக இன்பத்தின் படிகளாய்ப் பலப்பல இன்பத்தின் பலப்பலச் சாயல்களையும் கவிதையில் வடிக்கும் பொழுது அகவின்பமும் அதன்பால் சேரவேண்டும் அல்லவா. வெளிப் படையாகவே, ஆனால் விரசந்தட்டாமல் அவ்வுணர்வுகளை வெளிக் கொணர யான் மேற்கொண்ட முயற்சியில் ஓரளவு வெற்றியுடன் கவிதை இயல்பும் முழுமையாகக் கூடிவரும் வாய்ப்பைப் பெற்று விட்டேன் என்றே நம்புகிறேன். மூலக்கவிஞர்களின் வழியில் பயிற்சியும் தேர்ச்சியும் 'கோடி இன்பத்தில்' அவர்களின் சாயலை ஆங்காங்கே பிரதிபலிப்பதாக இருக்கலாம். ஆனால் அதுவே கவிதை இயல்பு கைகூடி வந்த நிலையை உறுதிப்படுத்துவதாகும். அதுபோதும் எனக்கு. இனி, கவிதை எனக்குத் தொழில் அல்ல. நான் கவிஞனும் அல்லன். ஒரு நோக்கத்துடன் கவிதை வழியைப் பயின்றேன். நோக்கம் நிறைவேறியது. இனிக் கவிதையை விடுத்துச் செயல்வழியே செல்வேனாக!

இதுவரை யான் எழுதியுள்ளவை பாரதியின் உணர்ச்சி வழியிலே ஆயினும் என் பாணி புத்திலக்கியத்தில் தனியான ஒரு முத்திரையைப் பதித்து அதில் நீங்கள் ஒரு நிறைவைக் கண்டால், இப்பொழுது மகிழ்ச்சியுடன் விடுத்துப் போகும் கவிதையுலகில் யான் முழுவெற்றியும் கண்டவன் ஆவேன்.

வாழ்க பாரதம்! வாழிய நீங்கள்!

**பாரதிநேசன்.**

# வேலன் பாட்டு

''எழில்மிகுபழ னியில்பழங்கொள
எதிர்கொளுந்தவ சிவபாலன்
பொழில்மிகுதணி கையில்குறத்தியால்
புகழ்மணம்பெறும் வடிவேலன்
கழல்கொளக்களம் அதிருசெந்திலில்
கடல்படசுரர் குலகாலன்
மழலையளமந் திரப்பொருள்சிவன்
மடல்கொளத்தரும் குருநாதன்''

அன்றைக் காடிய குன்றத் தில்தான்
இன்றைக் காடு கின்ருய்—முருகா
இன்றைக் காடு கின்ருய்
அன்றைக் கடுத்த குடியை இன்றேன்
அண்ட நாணு கின்ருய்—முருகா
அண்ட நாணு கின்ருய்

அன்றைக் காக்கிய மன்றத் தைத்தான்
இன்றைக் காளு கின்ருய்—முருகா
இன்றைக் காளு கின்ருய்
அன்றைக் குகந்த அறிவை இன்றேன்
அழியக் காணு கின்ருய்—முருகா
அழியக் காணு கின்ருய்

அன்றைக் காடிய வேலில் தானே
இன்றைக் காடு கின்ருய்—முருகா
இன்றைக் காடு கின்ருய்
அன்றைக் கடங்கு விதியை இன்றேன்
அடரக் காணு கின்ருய்—முருகா
அடரக் காணு கின்ருய்

அன்றைக் கோச்சிய கோலத் தானே
இன்றைக் கோச்சு கின்ருய்—முருகா
இன்றைக் கோச்சு கின்ருய்
அன்றைக் குவந்த அறனை இன்றேன்
அயரக் காணு கின்ருய்—முருகா
அயரக் காணு கின்ருய்

படையாறு கொண்டு பகைமாற வென்று
பதியாள நின்ற பதம்போற்றி
கடையாள மாந்தர் கடைத்தேறச் சார்ந்த
கனியாடத் தாங்குங் கரம்போற்றி
விடையேறும் வேந்தன் விடைதேற மைந்தன்
வீதியாட விஞ்சும் வேல்போற்றி
குடையாரக் குன்றக் கொடியாரக் கொண்ட
குடியாரக் கண்ட கோல்போற்றி
திரையாடுஞ் செந்தில் தினவாற வென்றித்
திளையாருந் தேவர் பிடிபோற்றி
வரையாடப் பொங்கு மயலாடச் சங்கு
வளையாடும் வேடர் கொடிபோற்றி
கரையாடச் செந்திற் கடலாடச் சிந்தின்
களியாரச் சாடும் கழல்போற்றி
தரையாடத் தாங்கு தலமாரத் தங்கு
தமிழாடச் சாரும் புகழ்போற்றி

## பொருளடக்கம்


வேலன் பாட்டு

I. இறையாரல்

1. கந்த போதன் 16
2. காவடிச் சிந்து 17
3. வேலன் வேல் 18
4. ஆறும் முகம் 19
5. குருபரனென வென்றவன் 20
6. ஆறுபடை 21
7. ஆறெடுத்த அமரன் 23

II. நிறையாடல்

1. விழியும் மொழியும் 26
2. மறையிலாடும் நிறை 27
3. காவாவா செந்தூரா 29
4. ஆருகப் பாருகந்தாய் 30
5. ஆவியணைந் தாளும் ஐயா 31
6. குமரன் குளிர் நடன் 33
7. அலையாய் வேலாடும் 34

III. வேலாயி

1. வாலை வரித்தவேலி 36
2. கன்னி வேலாயி — கட்டழகு கூடல் 37
3. கன்னி வேலாயி 39
4. வேலாயி என் காதலி 41
5. தேனிலவில் வேலாயி 43
6. வேலாயி என் ஆசைநாயகி 45
7. மஞ்சமகள் வேலாயி 47
8. வேலாயி என் மணநிறை 49
9. யாவிலும் வேலாயி 51

# 1. இறையாரல்

"இறையாளும் இன்ப இசையார வாழும்
மறையாளும் இன்ப மணியார நாளும்
உறவாளும் அன்பில் உளமார இன்ப
உறையாளும் அன்பின் உலகேயாம் இன்பம்"

# கந்த போதன்

சிங்கார மயிலாடும் வேலன் — சேர்புவி
திருவாடத் தணியாளும் சீலன் — ஈரிணை
தங்காதல் தனிலாரும் நாதன் — சார்குடி
தருவாடத் தமிழாளும் போதன்

நட்டாரை நட்பித்தருள் நாடன் — நற்றமிழ்
நாடாளும் வீரன்தவ வேடன் — அற்றவர்க்
கிட்டாரும் எங்கள்குல வேதன் — செந்தமிழ்
ஏடாளும் ஈசன்குரு நாதன்
(சிங்கார மயிலாடும்)

செந்தூரத் திங்கள்முகத் தூயன் — செந்தமிழ்த்
தேனூறுஞ் செம்பவள வாயன் — தென்திருச்
செந்தூரன் சிங்கன்குல காலன் — செவ்வுளஞ்
சீராடுஞ் செங்கமலப் பாதன் — காவடிச்
சிந்தாரத் தித்தித்தருள் வேலன் — சார்புகழ்ச்
செண்டாரச் சேர்வள்ளி லோலன் — நொந்துழி
வந்தாரை வாழ்வித்தருள் நாடன் — இன்னுன
வண்டார வோர்கந்த போதன்
(சிங்கார மயிலாடும்)

# சூாவடிச் சிந்து

மின்னலென உளந்தீட்டுங் கவிதை—ஆற்று

வெள்ளமென உணர்வாட்டுங் கவிதை—கழைக்

கன்னலெனக் களிகூட்டுங் கவிதை—காடிக்

கள்ளெனவே வெறியூட்டுங் கவிதை—பே

டன்னமென ஆடிவருங் கவிதை—பாயும்

அரியெனவே சாடிவருங் கவிதை—நகு

வன்னமலர் எழிலாடுங் கவிதை—ஆடும்

மயிலெனவே ஒயிலாடுங் கவிதை

குன்றமுறக் கோலாடுங் கவிதை—நனி

கூர்த்தவடி வேலாடுங் கவிதை—தமிழ்

மன்றமுற ஆருடுங் கவிதை—புவி

வாழ்த்தவிரு கூருடுங் கவிதை—பார்

வென்றதமிழ்ச் சீராடுங் கவிதை—லயம்

விஞ்சுதமிழ்த் தாளாடுங் கவிதை—இளந்

தென்றலெனத் தேனுடுங் கவிதை—களி

சிந்தெனவே வானுடுங் கவிதை

# வேலன் வேல்

நாடுபழங்கொள நாடுகொளத்தவ
ஞாலமெழக்கொளும் ஞானவேல்
ஆடுவரைகொள ஆறுகொளப்படை
யாளுமெழிற்குகன் ஆடும்வேல்

மீறுகரங்கொள வீறுகொளக்களம்
வீசுகழற்குகன் வீரவேல்
கூறுபுகழ்கொளக் கூறுகொளக்குகன்
கூசுகயல்விழி கூடும்வேல்

வீடுமெழப்பகை வேருமறப்படை
வீங்குதமிழ்க்குல வெற்றிவேல்
சாடுவினையறச் சாறுமறையுறத்
தாங்குமருட்குகன் சக்திவேல்

வேடுவருந்தொழ மேவுகுறக்கொடி
வீசுமயல்விழி வேட்டவேல்
தேடுபரங்கொளத் தேவர்குலப்பிடி
சேருகரங்கொளச் சீர்த்தவேல்

# ஆறும் முகம்

பழனிக் குகந்திடப் பஞ்சாமுதம்—பழனிப்

பஞ்சாமுதம்—இத்

தரணிக் குகந்தது தண்டாயுதம்—பால

தண்டாயுதம்—குகன்

கழலிற் குகந்திடக் கர்ணாமுதம்—சிந்தின்

கர்ணாமுதம்—கூர்

வியனில் உகந்தது வேலாயுதம்—செந்தில்

வேலாயுதம்—தமிழ்க்

கழனிக் குகந்திடக் கந்தாமுதம்—அருட்

கந்தாமுதம்—குரு

பரனில் உகந்தது பாரார்குலம்—தமிழ்ப்

பாரார்குலம்—தனித்

தலனிற் குகந்திடச் சண்டாமுதம்—தமிழ்ச்

சண்டாமுதம்—ஆ

றரணிற் குகந்தது ஆறும்முகம்—அருள்

ஆறும் முகம்

## குருபரனென வென்றவன்

குதிகழல்கொதி மாறவே
குறக்குலக் கொடி யாரவே
குறுமுலைக்குற மாணையே
கொடுதணிப்புகழ் கொண்டவன்

அதிர்திசையுற ஆளவே
அருந்தமிழ்க்குடி யாரவே
அறுபடைகொள யானையை
அடுத்தணைபரங் குன்றவன்

கொதிகடல்குதி செந்திலில்
கொடுமசுரரும் மாறவே
கொடுக்கறக்கொடுஞ் சூரனைக்
கொடிமயிலெனக் கொண்டவன்

குதிர்மடிகொள மைந்தனுய்ச்
குளிரமந்திரம் ஓதவே
கொடுமுடிகொளச் சூலனைக்
குருபரனென வென்றவன்

# ஆறு படை

தந்தைக் கன்று மூலப் பொருளை

ஓதியே—தகப்பன்

சாமி யென்று சாமி மலையுங்

கூடியே

பந்தம் அறவே பழனி மலையை

நாடியே—சிவனின்

பழமும் நழுவ ஞானப் பழமாய்

மாறியே

சொந்தங் கொளவே வள்ளி மானைத்

தீண்டியே—வேடர்

சுற்றஞ் சூழத் தணிகைப் பதியைத்

தாங்கியே

பந்தம் உறவே செந்திற் படையைக்

கூட்டியே—சூரன்

பங்கம் உறவே சேவல் மயிலாய்

மாற்றியே

தொந்தம் எனவே தெய்வ யானை

ஏற்றவன் — பரனைத்

தொட்ட வளனில் குன்றம் ஆளத்

தேர்ந்தவன்

விந்தை யுலகில் வென்ற கோலை

நீத்தவன் — பரனில்

விட்ட உறவைத் தொடரச் சோலை

சார்ந்தவன்

முந்தை வினையை மாற்ற வேலில்

ஆர்த்தவன் — புவியில்

முந்து தமிழர் குடியைத் தன்னில்

ஈர்த்தவன்

கந்தன் எனவே கோட்டங் கூடச்

சீர்த்தவன் — எழிலில்

கண்ட ஆறு படையும் ஆர

வாழ்த்துவம்

# ஆறெடுத்த அமரன்

ஆற்ருெழுக்காய்ப் பாடலெழ
ஆருளமும் ஆடல்கொள
ஆறெடுத்த அமரனையே பாடு—வேலும்
ஆட வினையைச் சாடத் துன்பம் மாறு

கூற்றுவன்போல் சூரனெழக்
கூடுமயில் சேவலெனக்
கூறெடுத்த குமரனையே கூடு—ஞானங்
கூட அருளும் ஆட இன்பந் தேடு

சாற்றுபுகழ் சாட்சிசொலச்
சாருதமிழ் ஆட்சிகொளத்
தண்டெடுத்த கந்தனையே சாரு—எழிலும்
சார அன்பு தோகை விரியும் பாரு

கூட்டுபுகழ் கூடிவரக்
கூடுதமிழ் கோடிபெறக்
குன்றெடுத்த குகனையுமே கூவு—மயிலும்
கூவ இன்பச் சோலை விரியும் ஆளு

வேட்டகுற மானணைய

வென்றதெய்வ யானையுடன்

வீற்றமயில் வாகனனைப் பாடி — வாழும்

விஞ்ச ஏங்கும் வையம் ஓங்க நாடித்

தேட்டமுற ஞாலமெலாம்

சேர்ந்துறையக் காலமெல்லாம்

சீற்றமறச் செந்தில்வழி யாரு — வேலன்

சீரு ரைத்தே சிந்தெடுத்தே ஆடு

ஏற்றமுற மூலமென

ஈட்டபொருள் சூலனுக்கே

ஈந்தவுமை பாலனெனச் சீர்த்தே — தமிழும்

ஏற்ற வீடும் ஈர்த்த வேலும் ஆர்த்தே

ஆற்றலுற ஆறுமுகம்

ஆறுபடை ஆறுகுணம்

ஆண்டவடி வேலவனைப் போற்று — புவியும்

ஆரும் மறையில் ஆடுந் தகையாய் ஏத்து

## II நிறையாடல்

''சிந்தாரச் சிந்தைக
சிந்தாளுந் தொண்டாரக்
கந்தாகந் தாவென்று
கந்தாரை — நொந்தாராய்
வந்தாரை வாழ்வித்து
வந்தாளுந் தண்டாரக்
கந்தாகந் தாகந்தா
கா.''

# விழியும் மொழியும்

அஞ்சுகத்தை மிஞ்சும் மொழி
கொஞ்ச — முருகன்
கொஞ்சும்விழி புன்னகைத்தே
கொல்லும் — வேலன்
சொல்லடுக்கச் சோரும் மொழி
கெஞ்ச — அவன்
கொல்லும்விழி சுட்டெரித்தே
கொஞ்சும்
(அஞ்சுகத்தை)

பஞ்சணையில் வஞ்சைமொழி
அஞ்ச — மையல்
விஞ்சவிழி வஞ்சியரைக்
கெஞ்சும் — வையம்
தஞ்சமெனத் தாங்கும்மொழி
யார — அருள்
எஞ்சவிழி அஞ்சலென
ஆளும்
(அஞ்சுகத்தை)

# மறையிலாடும் நிறை

செந்திலாடும் அலைகள் — கொஞ்சும்
சிந்திழைத்தே ஆடச் — சிவன்
மைந்தனாடும் மலைகள் — துஞ்சும்
மஞ்சிழைத்தே ஆடக் — களி
கந்தனாடுங் கலைகள் — மண்ணில்
காரிழைத்தே ஆட — அவன்
பந்தமாடும் படைகள் — விண்ணில்
பாரிழைத்தே ஆடும் — எழில்

முருகனாளுங் கொடியும் — தமிழ்
முடியளந்தே ஆட — அவன்
அருகிலாடும் மயிலும் — தமிழ்
அடியளந்தே ஆட — ஒளிர்
மெருகிலாடும் வேலும் ஊழ்
வினையொறுத்தே ஆடத் — தமிழ்
அருவியாடும் ஆறும் — அருள்
அலையடித்தே ஆளும் — அறு

முகனிலாருந் தமிழே — பார்
முதலுகந்த மொழியே — குரு
பரனிலாரும் வழியே — இக
பரமுகந்த நெறியே — அருட்
குக்னிலாடுங் குணமே — திருக்
குறளிலாடும் மணமே — உமை
மகனிலாரும் மணியே — தமிழ்
மறையிலாரும் நிறையே

---


*With best compliments from :*

# The Coronation Litho Works

(Estd. 1936)

**Post Box No. 2, SIVAKASI.**

Phone : 54, 254 & 463 Gram : CORONATION

Printers of all types of Photo-Off-set Printing and Manufacturers of Table Calendars, Sheet Calendars, Greeting Cards, Wedding Cards etc., etc.,

*Branches :*

**56-B, Sami Reddi St.,**
**Ground Floor,**
**Egmore, MADRAS-8.**
Phone : 20690
Gram : CORONATION

**"Yusuff Mansion"**
**204-A, Khetwade Back Road,**
**BOMBAY-4.**
Phone : 357737
Gram : CEEPEEWAGH

# காவாவா செந்தூரா!

சிந்தாரக் கழலாடுஞ் செந்தூரா — அருட்

கந்தாவுன் கரமாடக் காவாவா

சிங்கார மயிலேறிக் குன்றுடியே — தமிழ்ச்

சீராடப் படையாறு கொண்டாடியே

மங்காத புகழாரக் கோலாடியே — தமிழ்

மாரார வினைமாற வேலாடியே

(சிந்தாரக் கழலாடும்)

பாரணைய ஆறுபடை வீடெடுக்கவே — தமிழ்

பாவிணைய மாணயுளம் வேட்டணையவே

சூரணையே கூறுபட வேரறுக்கவே — இரு

தோளணைய யானையையும் வென்றிணையவே

(சிந்தாரக் கழலாடும்)

தாரணையத் தாரணியும் நாடி வரவே — அணி

சந்தனத்தில் சாருமணம் வீசிவரவே

சீரணையச் சேவடியுங் கூடிவரவே — களி

சிந்தெடுத்தே காவடியும் ஆடிவரவே

(சிந்தாரக் கழலாடும்)

# ஆறுகப் பாருகந்தாய்

சொல்லெடுத்தேன் கவியாள - அந்தச்

சொல்லாக நீயுகந்தாய் செவியார - முருகா

இல்லடுத்தேன் இகமார - அந்த

இல்லார லயமுகந்தாய் அகமாட

கூறெடுத்தாய் புவியார - சூரன்

கூறூரக் கொடியுகந்தாய் மயிலாட - முருகா

ஆறெடுத்தாய் படையாக - முகமும்

ஆறுகப் பாருகந்தாய் குடையார

(சொல்லெடுத்தேன்)

கண்ணெடுத்தாய் கனிவாள - அந்தக்

கண்ணாக வேலெடுத்தாய் களமாட - முருகா

மண்ணடுத்தாய் கனியாள - அந்த

மண்ணூரத் தாளெடுத்தாய் கழலாட

குன்றெடுத்தாய் குகனாக - அந்தக்

குன்றூரக் கோலெடுத்தாய் புகழாட - முருகா

வென்றுகத்தாய் வினைமாற - வினையை

வென்றாளத் தோளெடுத்தாய் மணியார

(சொல்லெடுத்தேன்)

## ஆவியணைந் தாளும் ஐயா

**தொகையரு** — **இறையேற்றம்**

சென்னிமதி யோனின் செல்வ!
சிந்தாவடி வேல்முருகா!
கன்னிமொழி யோரின் தெய்வக்
கந்தா! திரு மால்மருகா!

**எடுப்பு** — **கன்னி வேட்கை**

வஞ்சிக்குற வள்ளி தன்னை
வஞ்சித்துற வாடல் என்ன?
கொஞ்சுங்கிளிக் கன்னி என்னைக்
கூடிக்களித் தாலின் என்ன?

**தொடுப்பு** — **கனிவுள மாற்றம்**

நெஞ்சத்துடிப் பாடக் கெஞ்சும்
நேசம்மறுத் தாலும் என்ன?
மஞ்சள்முகத் தோனே! கொஞ்சம்
மங்கைமுகம் பாரும் மன்ன!
(வஞ்சிக் குறவள்ளி தன்னை)

முடிப்பு கற்புளத் தேற்றம்

புள்ளிமயில் ஆட உள்ளம்
போதைகொளும் புன்ன கையால்
எள்ளிமயல் ஆட அள்ளி
ஏந்துமெழில் மென்ன கையார்
வள்ளிதெய்வ யானை உன்றன்
மஞ்சவுற வாக மெய்யால்
அள்ளியணை ந் தார வென்றன்
ஆவியணை ந் தாளும் ஐயா!

(வஞ்சிக் குறவள்ளி தன்னை)

*With best compliments from :*

**MADRAS FERTILIZERS**
Manali, MADRAS-600 068.

## குமரன் குளிர்நடன்

குன்றம் எல்லாங் குமரன்
குளிர் நடனே — தமிழ்
மன்றம் எல்லாம் அமரன்
மகிழ்நயனே

விந்தை மயிலுடன் வேலாட — விழி
வீசப் புவியுடன் குடியாடக் — களி
சந்தத் தமிழுடன் தாளாட — மடி
சாரப் பிடியுடன் கொடியாடக்
(குன்றம் எல்லாம்)

கந்த மலையிலே கதிராடக் — கந்தன்
கண்ணின் அசைவிலே காராட — அவன்
பந்த வலையிலே பதியாட — மேவும்
பண்ணின் இசைவிலே பாராடத் திருச்
செந்தில் அலையிலே சிந்தாட — வேலன்
சேரும் இடையிலே முன்னாட — மகிழ்
அந்திக் கலையிலே சித்தாடக் — கூடி
ஆடும் இணையிலே விண்ணாரக்
(குன்றம் எல்லாம்)

# அலையாய் வேலாடும்

களமெழ வேல்ன் படையாள—அலை

கடலுறும் அலையாய் வேலாடும்—விழிக்

கயலெழ வேலன் கடையாள—அருட்

கடலென ஆறுய் முகமாடும்

குன்றுற வேலன் கரமாடப்—புவி

கொண்டிட வேலும் விதியாடும்—தணி

வென்றுற வேடர் கொடியார—மயல்

விஞ்சிட வேலாய் விழியாடும்

செந்திலில் வேலன் கழலாடக்—களி

சிந்தினில் அலையும் சிலிர்த்தாடும்—பரங்

குன்றினில் தேவர் பிடியாரக்—கிளி

கொஞ்சிட அலையாய்ச் சிரிப்பாடும்

(களமெழ வேலன்)

# III. வேலாயி

"கண்ணூரக் கண்டு

களியாரக் கொண்டெழில்

மண்ணூர வாழ்வில்

மகிழ்வாடத் — தண்ணூர

விண்ணூரப் பார்கொள

வேலாயி தன்னையே

பண்ணூரச் சார்ந்தேன்

பனித்து"

# வாலை வரித்த வேலி

கட்டம் போட்டுக் கடைந்த முகமும்
வட்டம் போட்டு வரைந்த விழியும்
பட்டை தீட்டிய படிக நுதலும்
பட்டங் கூட்டிய பவழ இதழும்
பக்கர் காட்டும் பளிங்காய் வனப்பின்
செக்கர் கூட்டித் தெறிக்குங் கதுப்பும்
முத்தக் கோட்டில் முகையின் விரிப்பாய்
முத்துக் கோத்த முல்லைச் சிரிப்பும்
வடித்த வடிவில் வறித்த இடையும்
துடித்த நடையில் சுழித்த எழிலும்
வெடித்த வளனாய் விம்மிய மார்பும்
அடர்த்த அலையாய் அள்ளிய குழலும்
அடித்த பொன்னாய் அமைந்த குணமும்
எடுத்த பண்ணாய் இழைந்த மணமும்
மடுத்த வாலை வரித்த பயனாய்
அடுத்த வேலி அணைந்தாள் நயனே!

# கன்னி வேலாயி - கட்டழகு கூடல்

வன்மையில் மன்னுமெழில்
மண்டவொயில் ஆட
வட்டமிடும் வண்ணவிழி
வண்டுமொளிர்ந் தார

முன்னழகு முட்டவெழில்
முத்தமிடக் கண்டே
மொட்டவிழும் முல்லையென
முத்துநகை கொண்டே

கன்னமெனக் கண்டகனிக்
கன்னலிதழ் ஊறக்
கட்டழகுக் கன்னியென
கட்டொழுகுங் கூறில்

மின்னலிடை வில்லவிடி
வெள்ளியெனப் போந்தே
விட்டகுறை யென்னவிழி
வெட்டவெண மோந்தே

அன்னமென வைத்தவடி
யன்னநடை யார
அம்பெனவே தைத்தவிழி
அன்பொழுக ஆளப்
பின்னழகு பின்னவிடப்
பின்னலைந் தாடப்
பிம்பமெனப் பின்னியெணைப்
பெண்டுகொளக் கூவப்
பொன்னிழையப் பூத்தமலர்ப்
போதவிழக் கூடும்
புத்தமுதாய்ப் பொங்குமுடல்
போராடிச் சாடும்
முன்னிரவில் மோதுமுளம்
மோகமயில் ஏற
முத்தமிழாய் மொட்டவிழ
வேலாயி நின்றாள்

# கன்னி வேலியாய்

நாளைக்கொரு துடிப்பாய்
நண்ணரியிழை ஒயிலும்
வேளைக்கொரு வெடிப்பாய்
விம்மியெழும் எழிலும்

காலைக்கொரு நனவாய்க்
கன்னியுடற் கனிவும்
மாலைக்கொரு கனவாய்
மஞ்சுபடர் விழியும்

பொழுதுக்கொரு லயமாய்ப்
பொங்கியெழும் உளமும்
தொழுதற்கொரு நெறியாய்த்
தொட்டவுள நிறையும்

இழைதற்கொரு வடிவாய்
எட்டுமுடற் செறிவும்
திளைதற்கொரு பொழிவாய்த்
தெள்ளுமகப் பொலிவும்

தழுவற்கொரு வளனுய்ச்
சாருமுடல் விழைவும்
கொழுநற்கொரு வரமாய்க்
கூடுமுளக் குழைவும்
வழுவற்கொரு நயனுய்
வாசமுறக் குணமும்
எழுதற்கொரு பயனுய்
ஏதமறக் குலமும்

மின்னலிட்ட வனப்பில்
இல்நயத்த மணமும்
கன்னமிட்ட உளத்தில்
தன்னையிட்ட வளமும்
மென்னகையாய் அரும்பப்
பின்னலிட்ட கனவே
கன்னியென வேலி
தன்னிலுற்ற கனிவே.

# வேலாயி என் காதலி

கந்தவடி வார — நிறை
கன்னியலை வீச — கனிக்
கன்னமொளிர்ந் தாரக் — கயற்
கண்ணும்வலை வீச — மயற்
கள்ளியுனைக் கண்டேனடி
— வேலாயி உனில்
கள்ளின்வெறி கொண்டேனடி

விந்தைமயில் ஆர — ஒயில்
விஞ்சவெழில் வீச — ஒளிர்
மின்னலிடை யாட — விழி
மின்னவுளம் வீச — விடி
வெள்ளிநகை பூத்தாயடி
— வேலாயி புது
வெள்ளமென ஆர்த்தாயடி

செந்திலலை யாட — எழுஞ்
சிந்தினெழில் கூற — உளஞ்

செந்தமிழில் ஆரக் — களிச்
சிந்துலயங் கூடத் — தமிழ்த்

தென்றலென வந்தாயடி — வேலாயி யிதழ்
சிந்தவெதிர் நின்ருயடி

அந்திமயல் ஆர — விழி
அம்புகளம் வீச — மட

வன்னநடை யாட — எனை
அண்டமனங் கூச — மலர்ந்

தல்லியென வந்தாயடி — வேலாயி உனை
அள்ளிமணங் கொண்டேனடி

## தேனிலவில் வேலாயி

பின்வந்து கட்டி — என்னை
பித்தாக அடித்தே
முன்வந்து முத்தித் — திக்கு
முக்காட அணைத்தே

மின்வெட்டாய் வீசிக் — கண்ணில்
விரகமெழ ஆடிப்
பொன்வண்டாய்க் கூசிக் — கன்னிப்
புளகமுறச் சாடிக்

கட்டழியும் உளமாய் — விம்மிக்
கட்டியுடல் இறுகச்
சுட்டெரியும் உடலாய் — மய்யல்
சொட்டவிழி மறுகத்

தட்டழிய நெஞ்சம் — என்னைத்
தழுவுமுடல் வெடிக்க
மட்டழிய மஞ்சம் — என்னை
மருவுமுடல் துடிக்க

முட்டவெழுங் கொங்கை — இதய
முரசமடித் ததிரக்
கட்டழகு பொங்க — உடலம்
கரகமெனச் சுழலப்
பட்டெனவே மேவ — மேனி
பசலையற்றே ஒளிரச்
சிட்டெனவே கூட — வானிற்
சிறகடித்தே குளிரத்
தேன்கண்ட திணையாய் — இழையத்
தேனிலவு கூட
வான்கண்ட மணியாய் — இணைய
வானிலவாய் ஆடப்
பார்கொண்ட இசையாய் — இல்லம்
பாலாடி யார
வேர்கொண்ட நகையாய் — என்றன்
வேலாயி வந்தாள்

# வேலாயி - என் ஆசைநாயகி

கோடி உடுத்திடக் கோலம் இனித்திடக்

கூவிக் களித்துளந் துள்ளாட — நீ

ஆடி அடுத்திட ஆசை வெடித்திட

ஆவி துடித்திடும் வேலாயி — நான்

வாடி வருகையில் வாலை மணத்திட

வாரி சிலிர்த்திட உள்ளார — நீ

நாடி வருகையில் நாளம் வெடித்திட

நாடி துடித்திடும் வேலாயி

தோடி இசைக்கையில் தோயுங் கனவினில்

தோகை விரித்துளம் பண்ணூர — நீ

மோடி இசைக்கையில் மூளும் அரவென

மோகந் துளிர்த்திடும் வேலாயி — இசை

பாடி வருகையில் பாவி குறுக்கிடப்

பாதி முடிக்கையில் பண்சோர - நீ

தேடி வருகையில் சேதி மடுத்திடத்

தேதி குறிக்கணும் வேலாயி

ஊடி விலகையில் ஊனும் மறுகிட

ஊணுங் கசந்திட உள்சோர — நீ

ஓடி அலைகையில் ஊனும் உருகிட

ஊடல் இனித்திடும் வேலாயி — கண்

மூடி மகிழ்கையில் மோகம் வெடித்திட

மோனந் துடித்திடக் கண்சோர — நீ

கூடி மகிழ்கையில் கூவிக் கலந்திடக்

கோடி கொடுக்கணும் வேலாயி

*With best Compliments from:*

## Kasturi Trading Company

**Sivakasi**

Tamil Nadu.

# மஞ்சமகள் வேலாயீ

வஞ்சிக் கொடியென மஞ்சமகள்—எழில்
வண்ணம் படர்ந்தெனைக் கெஞ்சுமகள்—களி
மிஞ்சக் குழைந்திடும் நெஞ்சமகள்—உயிர்
விண்ணில் இழைந்திடக் கொஞ்சுமகள்—உள
மஞ்சு பரவிடுந் தஞ்சமகள்—மகிழ்
மண்ணில் எனக்கென எஞ்சுமகள்—உளங்
கெஞ்ச எனைச்சுடும் வஞ்சமகள்—மதுக்
கிண்ணம் நிகர்த்துளந் துஞ்சுமகள்

தங்கத் தகடென மின்னுமகள்—உயிர்த்
தந்தச் சிலையென மன்னுமகள்—உளம்
பொங்க உலவிடும் அன்மைகள்—உயிர்
பொன்றுந் துணையுளப் பொன்னுமகள்—தவ
நங்கை எனக்கென வாழுமகள்—களி
நட்டுக் கலந்துற வாடுமகள்—எனை
அங்கை யணைந்துற வாளுமகள்—உயிர்
அட்டில் அறுசுவை யானமகள்

நண்ணிட நண்ணிடும் நாணமகள் - உயிர்
நட்டுளம் நட்டிணை யானமகள் - எனைக்
கண்ணினுள் கண்ணெனக் காணுமகள் - உடற்
கட்டினில் கட்டொழுக் காளுமகள் - உயிர்ப்
பண்ணினுள் பண்ணென ஆடுமகள் -உடற்
பட்டினில் பட்டுளம் ஆளுமகள் – வள
மண்ணினில் விண்ணிணை காணுமகள் - உள
வட்டினில் நட்டெனை யாளுமகள்

*With Compliments from :*

# The Southern India Exporting Co.,

Post Box No. 69
New Road, Sivakasi — 626123

Factory & Magazine at Anaiyur

The biggest concern producing 'Eagle Brand' famous Electric crackers, Novelty, Sparklers & Fancy Fire Works in numerous varieties and dealing in chemicals & Papers relating to Fire Works Industries

Gram : Export

Phone: Factory—21, Office—94, Residence—572

# வேலாயி-என் மனைநிறை

வீட்டிலுறும் ஒளியே—வேலாயி
வென்றுள மார்நிலவே—உளக்
கூட்டிலுறுங் கிளியே—வேலாயி
குன்றெனைச் சார்நிழலே—தமிழ்
நாட்டிலுறும் நயனே-வேலாயி
நண்ணுற வார்நலனே-என்
பாட்டிலுறும் பயனே-வேலாயி
பண்ணுறும் பார் நடனே

காட்டிலுறுங் கனியே-வேலாயி
கண்டெடுத் தாள்நிதியே-களிக்
கூட்டிலுறுங் களியே-வேலாயி
கொண்டடுத் தாழ்நதியே-தமிழ்
ஏட்டிலுறும் நெகிழ்வே-வேலாயி
இன்புறச் சார்மறையே-உயிர்
மாட்டிலுறும் மகிழ்வே-வேலாயி
மன்பதை யார்மழையே

மேட்டிலுறும் விளையே—வேலாயி

விண்டனை யாள்மதியே—இறை

ஈட்டிலுறுந் தினையே—வேலாயி

இன்மனை சார்மதிலே—இருட்

காட்டிலொளிர் கலையே—வேலாயி

கண்ணுறுங் கார்மணியே—தனை

வாட்டியொளிர் மலையே—வேலாயி

மண்ணுறும் மாமணியே

---

*With best compliments from:*

# S. L. Sankara Kumaru Nadar & Sons

Iron, Hardware & Paint Merchants

Post Box No. 106

166, North Cotton Road,

TUTICORIN—1

Branches at Trichy, Kumbakonam & Madras

Gram: Iron

Phone Off: 20540
Res: 21315

# யாவிலும் வேலாயி

அலைசிலிர்த் தாடும் வேலையிலே — வேலி
அகம்விரிந் தாளும் ஆழங் கண்டேன்
மலர்சிரித் தாடும் சோலையிலே — வேலி
மணம்விரித் தாடுங் கோலங் கண்டேன்
மரைவிரித் தாளுங் கதிரினிலே — வேலி
மணம்விரித் தாளும் பரிவைக் கண்டேன்
கரைவிரித் தாளும் நதியினிலே — வேலி
கரம்விரித் தாளும் கனிவைக் கண்டேன்

தழைவிரித் தாடுங் கானதிலே — வேலி
தனைவிரித் தாளும் வாலை கண்டேன்
மழைவிரித் தாடும் வானதிலே — வேலி
மறைவிரித் தாளும் மாண்பைக் கண்டேன்
தரையொளிர்ந் தாடும் நிலவினிலே — வேலி
தகையுளம் ஆரும் குளிர்வைக் கண்டேன்
வரையிழிந் தாடும் புனலினிலே — வேலி
மனைவழி யாரும் மகிழ்வைக் கண்டேன்

களங்கதிர் ஆடுங் காலையிலே — வேலி
கயல்விரித் தாளுங் காதை கண்டேன்
வளர்மதி யாடும் மாலையிலே — வேலி
மயல்விரித் தாளும் போதை கண்டேன்
பயன்விரித் தாளும் ஏட்டினிலே — வேலி
பண்ணிசைத் தாரும் பொலிவைக் கண்டேன்
நலன் விரித்தாளும் நாட்டினிலே — வேலி
நண்ணுற வாளும் பொழிவைக் கண்டேன்
குயில்குழைந் தாளும் ஓசையிலே — வேலி
குரல்விழைந் தாளுந் தாபங் கண்டேன்
மயில்குளிர்ந் தாடுந் தோகையிலே — வேலி
வளம்விரிந் தாரும் போகங் கண்டேன்
பயிர்விரித் தாளும் ஏரினிலே — வாழ்வைப்
பயனுற ஆளும் வேலி கண்டேன்
உயிர்விரித் தாடும் பாரினிலே — என்னை
உளமுற ஆள வேலி கொண்டேன்

### தமிழ்மணமே காவா

## பல்லவி

குகனே வேல் முருகா - அறு
குணனே வாவா - உமை
மகனேமால் மருகா - தமிழ்
மணமே காவா

## அனுபல்லவி

அமரா சிவன் மைந்தா - தமிழ்
அழகா வாவா - எழிற்
குமராதவக் கந்தா - தமிழ்க்
குரவா காவா

## சரணம் - 1

தண்டாடும் பாலா - தமிழ்த்
தளிரே வாவா - மயில்
கொண்டாடும் கூரு - தமிழ்க்
குளிரே காவா - திருச்
செந்தூரா வேலா - தமிழ்த்
திரையே வாவா - களி
சிந்தாடுந் தீரா - தமிழ்த்
திளையே காவா
(குகனேவேல் முருகா)

## சரணம்-2

விளையாடும் நேசா — தமிழ்
விளேயே வாவா — இரு
மனையாடும் வாசா — தமிழ்
மழையே காவா — அரு
மறையாடும் சீலா — தமிழ்
வளமே வாவா — எழில்
வரையாடும் வீரா — தமிழ்
மறமே காவா
(குகனேவேல் முருகா)

## சரணம் - 3

அகமாடுந் தேனே — தமிழ்
அடையே வாவா — எழில்
இகமாரும் வானே — தமிழ்
இசையே காவா — அறு
முகமாடுங் கோவே — தமிழ்
முடியே வாவா — குளிர்
பதமாடுந் தேவே — தமிழ்ப்
பதியே காவா
(குகனேவேல் முருகா)

## சரணம்-4

கழலாடும் பாதா — தமிழ்
கனலே வாவா — எழில்
புகழாடும் போதா — தமிழ்ப்
புனலே காவா — அறு
படையாளும் வேதா — குரு
பரனே வாவா — விழிக்
கடையாளும் நாதா — அருட்
கரனே காவா
(குகனேவேல் முருகா)

## வாராயோ சிவன்மைந்தா

வந்தோம் என்றிவண் வாராயோ சிவன்மைந்தா
தந்தோம் என்றருள் தாராயோ தவக்கந்தா
நொந்தோம் என்றுனை நோற்றே
நுகர்துயர் வென்றேமே — விழி
சிந்தோம் என்றுனைச் சேர்ந்தே
திகழ்வளங் கண்டோமே — உளம்
வெந்தோம் என்றுனை வேட்டே
மிகுதவங் கொண்டோமே — எமைத்
தந்தோம் என்றுனைச் சார்ந்தே
தகுதலங் கண்டோமே
(வந்தோம் என்றிவண்)

செந்தூ ரில்கடல் சீற
வேலெழ ஆர்ந்தோனே — இரு
செந்தா ளில்கழல் சீறக்
கூறெடுத் தாண்டோனே — வளச்
செந்தோ ளுந்தின வாறச்
செருக்களம் வென்றோனே — களி
சிந்தா டுந்தமிழ் ஆரத்
திருப்புகழ் கொண்டோனே
(வந்தோம் என்றிவண்)

## தொண்டொழுகக் கொண்டேன்

தந்தைகொள மந்திரமுங்
கொண்டபொருள் தந்தாய்
தந்தையெனும் பந்தமறத்
தண்டுகொள நின்ருய்
பந்தமுற வந்தகுறப்
பைங்கொடியணந்தாய்
பைந்தமிழில் சந்தமென
மண்டுபுகழ் கொண்டாய்
விந்தையென வேலுமுற
வெங்களமுங் கண்டாய்
வெஞ்சமரில் சூரனையும்
வென்றணையக் கொண்டாய்
சொந்தமென யானையையும்
குன்றமுறக் கண்டாய்
தொந்தமுற வேலனுனைத்
தொண்டொழுகக் கொண்டேன்

இளசை பாரதி பேரவையின்

For Quality, Strength and Durability

# SANKAR CEMENT

## THE INDIA CEMENTS LIMITED,

175/1, MOUNT ROAD,

**MADRAS - 600002.**

*Factories :*

**Sankarnagar, Tirunelveli District**

**Sankaridrug, Salem District**

Dr. N. Sethuraghunathan's

# KAYAKALPA

The Panacea for
Perennial Youth hood & Longivity

---

Kaya Kalpa assures a sustained
and a hundred times more potent
Youth hood even in your sixties.

**Kaya Kalpa is an Aphrodisiac and more**

YOU NEVER GROW OLD
IN KAYA KALPA'S FOLD

**Kaya Kalpa, besides, completely cures**

LEUKODERMA

**and other similar skin defects**

to be consumed twice a day
with Just three drops of honey

Price Rs. 40/-
for a pill of sixty doses

---

(Postage Rs. 5/- extra)

---

Order only with advance remittance Please

**BHARATI ACADEMY**
SIDDHA MEDICINES DIVN.
ETAIYAPURAM. (Tamil Nadu)